69

# (கலைஞரின்) குறளோவியம் - குறுந்தொகை காட்சிப்படுத்தும் அகவாழ்க்கை



**முனைவர் க. கலாவதி**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம்
கோவை - 641 043.

இலக்கியங்கள் மக்களின் வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்டும் புகைப்படக்கருவியாக அமைந்துள்ளன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்கை நெறி வகுத்துக் காட்டி வள்ளுவரால் வழங்கப்பெற்ற அறிவுக் கருவூலமே திருக்குறள். சங்ககால மக்களின் அகவாழ்க்கையைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ளதே குறுந்தொகை. குறுந்தொகை புலவர்கள் அகவாழ்வின் அற்புதங்களை உவமை, உள்ளுறை, இறைச்சி வாயிலாக தங்கள் கருத்துக்களை காட்சிப்படுத்தியிருப்பது போல, கலைஞர் குறளோவியத்தில் குறட்பாக்களுக்குரிய கருத்துக்களை கதையாக, ஓவியமாகத் தன் கைவண்ணத்தில் வெளிப்படுத்தியுள்ளார். இவ்விரு நூல்களும் இன்பத்துப்பாலின் இனிமையை எவ்வாறு எடுத்துரைக்கின்றன என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## அலர் அறிவுறுத்தல்

சங்க இலக்கிய அகநூல்களில் அலர் என்னும் சொல்லினால் விளையும் செயல் அதிகமாகக் காணப்படுகின்றது. அலர் தோன்றிய பின்பே தலைமக்கள் உடன்போக்கினை மேற்கொள்ளவோ அல்லது திருமணம் செய்யவோ முடிவுசெய்கின்றனர். அலரே தலைவன் தலைவியின் கற்புவாழ்க்கைக்கு அடித்தளமாக அமைகிறது என்றே கூறலாம். அலர் அறிவுறுத்தல் என்னும் செயலுக்கு கலைஞர் குறிப்பிடும் விளக்கம் இதோ! இரவுக்குறியில் சந்தித்துக் கொள்ளும் நிலையில் தலைவன் வந்தவுடன் நீங்கள் வந்ததை யாரும் பார்க்கவில்லையே? என்று வினவ அதற்கு அவன் உன்னைத்தவிர என்னை யாரும் பார்க்கவில்லை என்று விடையளித்தான். தலைவனும் உன்னையும் யாரும் பார்க்கவில்லைதானே! என்று வினவ அவளும், என் இல்லத்தில் ஒளிவிடும் அகல் விளக்கும், என் இதயத்தில் ஒளிவிடும் இந்த அணையா விளக்கும் (காதல்) தவிர வேறு யாருக்கும் இங்கு வந்தது தெரியாது என்றாள். பொழுது விடிந்தது, யாருக்கும் தெரியாதென்று இருவரும் எண்ணியிருந்த அந்தக் காதல் சந்திப்பு ஊர் முழுவதும் தெரிந்துவிட்டது.

அவள் தோழி, அவளிடம் தென்னந்தோப்புச் சந்திப்புப் பற்றி தெருக்கோடி மண்டபத்தில் ஐந்தாறு பெண்டிர் பேசிக் கொண்டிருந்ததை விளக்கமாக உரைத்தாள். அதற்கு அவள், 'நான் என் காதலரைச் சந்தித்தது ஒரு நாள்தான் அடடா! அதற்குள் இந்தச் செய்தி சந்திர கிரகணம் ஏற்பட்டால் எல்லோருக்கும் தெரிவது போல் பரவி விட்டதே' என்று வேதனையுடன் பதில் கூறினாள்.

***கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்***
***திங்களைப் பாம்புகொண் டற்று (குறளோவியம் ப-120)***

என்ற குறள் வழி கலைஞர் அலரின் தன்மை எடுத்துரைக்கின்றார்.

குறுந்தொகை அலரின் தன்மையை எடுத்துரைக்கும் தன்மையைப் பின்வரும் பாடல்வழி அறியலாம்.

***முட்கால் இறவின் முடங்குபுறப் பெருங் கிளை***
***புணரி இகுதிரை தரூஉம் துறைவன்***
***புணரிய இருந்த ஞான்றும்***
***இன்னது மன்னோ நல்நுதல் கவினே (குறுந் - 109)***

சிறைப்புறத்தனாக நின்ற தலைவனிடம், பிறர் அறியும்படி களவு வெளிப்பட்டு அலராய் மலர்ந்துள்ளது. அதனால் விரைவில் வந்து அவளைத் திருமணம் செய்து கொள் என்று தோழி தலைவனுக்கு உணர்த்தினாள்.

பகற்குறியில் தலைவியைக் காண தேரில் வந்தான் தலைவன். தேரில் வந்த தலைவனைத் தலைவி காணும் முன்னே புன்னை மலர்களைக் கொய்து கொண்டிருந்த ஆயத்தார் பார்த்துவிட்டனர். இதனால் ஏற்படும் அலர்மொழிகள் அவன் மணந்தாலன்றி ஓயாது என்னும் பொருள்பட (குறுந் -311) இப்பாடல் அமைந்துள்ளது.

***நிலம் புடைபெயரினும் நீர் திரிந்து பிறழினும்***
***இலங்குதிரைப் பெருங்கடற்கு எல்லை தோன்றினும்***
***வேவ்வாய்ப் பெண்டிர் கௌவை அஞ்சிக்***
***கேடு எவன் உடைத்தோ - தோழி! (குறுந் - 373)***

என்னும் பாடல் அலர் மிக்கவழி ஆற்றாளாகிய தலைவிக்குத் தோழி ஆறுதல் கூறுமுகத்தான் அமைந்துள்ளது. 'உலை வாயை மூடினாலும் ஊர் வாயை மூட மூடி இல்லை' என்னும் முதுமொழிக்கேற்ப அலர் பரவும் என்பதையும் இப்பாடல் விளக்கி நிற்கின்றது.

நாகத்தையும் மயங்வைக்கும் குழலோசை தலைவிக்கு நரகமாக அமைகின்றது. என்னை வருத்தும் சேனை மாலைக்குத் தூதாக மட்டுமல்ல ஆயன் குழலாகவும் வருகிறதே என்று புலம்புகிறாள்.

***அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்***
***குழல்போலும் கொல்லும் படை (குறளோவியம் ப - 13)***

என்னும் குறள் தலைவிக்கு வரும் மாலைப் பொழுதின் கொடுமையை எடுத்தியம்புகின்றது. மாலைப்பொழுது வந்தது கண்ட தலைவியின் ஆற்றாமை,

***ஞாயிறு பட்ட அகல் வாய் வானத்து***
***அளியதாமே கொடுஞ் சிறைப் பறவை***
***இறை உறை ஓங்கிய நெறி அயல் மராஅத்த***
***பிள்ளை உள்வாய்ச் செரீஇய***
***இரை அகாண்டமையின் விரையுமால் செலவே(குறுந் - 92)***

என்னும் பாடல் குறிப்பிடுகின்றது. பறவைகள் கூட தம் குஞ்சுகளை நினைத்து இல்லம் திரும்பி இம்மாலைப் பொழுதிலும் தலைவன் வரவில்லையே என்று காம நோயைப் பொறாத தலைவி, காமம் மிக்க கழிபடர் கிழவியாக மாலைப் பொழுதினைக் கண்டு வருந்திக் கூறுவதாக இப்பாடல் அமைகின்றது.



## பொழுது கண்டு இரங்கல்



களவு, கற்பு வாழ்க்கையில் பொழுது கண்டு இரங்கும் நிலை தலைவிக்கே உரித்ததாகக் காணப்படுகின்றது. கார்ப்பருவம், மாலை பொழுது போன்றவை தலைவியின் வருத்தத்தை மிகுவிப்பனவாக அமைகின்றன. இந்நிகழ்வினை கலைஞரின் கற்பனை வளத்தால் விளைந்த கவிஇன்பத்தை முதலில் காண்போம்.

இரவில் அனுபவித்த இன்பத்தையெல்லாம் அசை போட்டுப் பூரித்துப் போக அந்தக் காலை நேரம் அவளுக்குத் துணையாக இருந்தது. அவளது களிப்பிலாடிய அந்த மயில் மாலைப் பொழுது கண்டு மனங்கலங்கி நின்றது. காலையில் அரும்பி மாலையில் மலராகும் காதல்நோய் அவளை வருத்தி வாட்டியது. வருந்தியத் தலைவியின் புலம்பலாக,

***காலைக்குச் செய்தநன்று என்கொல் எவன்கொல்யான்***
***மாலைக்குச் செய்த பகை (குறளோவியம் ப - 354)***

இக்குறள் அமைந்து மாலைப்பொழுதின் தன்மையை எடுத்துரைக்கின்றது.

***காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி***
***மாலை மலரும்இந் நோய் (குறளோவியம் ப - 13)***

என்றும் குறள் மாலையில் வரும் நோயைக் குறிப்பிடுகின்றது.

### கனவு

காதலர்களுக்கு இன்பம் பயப்பது கனவுகள்தான். கனவுகள் நனவாகாதா என்று ஏங்கும் ஏக்கமும் வேதனையையும் அவர்களே அறிவர். கனவுலகில் உலாவும் ஒரு பெண்ணின் கதையைக் கேளுங்கள்.

கனவிலே வந்து என்னை என் காதலர் கூடினார். இன்ப சுகந்தரும் அன்பு பொருந்தி ஆனந்தம் பெற்றேன். என்னை விட்டு நீங்காமல் கனவிலே கூடியிருந்த என் காதல் தேவனை நனவு என்று சொல்லப்படுகிற ஒரு கொடியோன் ஓடிவந்து பிரித்து விட்டானே என்று அவள் புலம்புவதை,

***நனவென ஒன்றில்லை யாயின் கனவினாற்***
***காதலர் நீங்கலர் மன் (குறளோவியம் ப - 61)***

என்ற குறள் எடுத்துரைக்கின்றது. வினைமேற் பிரிந்த இடத்து கனாக் காண்கிறான் தலைவன். இதனை,

***வேனிற் பாதிரிக் கூன் மலர் அன்ன***
***மயிர் ஏர்பு ஒழுகிய அம் கலுழ் மாமை***
***நுண் பூண் மடந்தையைத் தந்தோய் போல***
***இன் துயில் எடுப்புதி கனவே***
***எள்ளார் அம்ம துணைப் பிரிந்தோரே (குறுந் - 147)***

என்னும் பாடல் எடுத்துரைக்கின்றது. அழகிய தன் தலைவியை கனவில் காட்டிக் கனவினைப் புகழ்ந்து கூறும் விதமாக இப்பாடல் அமைந்துள்ளது.

### பசலை

தலைவன் பிரிவால் தலைவிக்கு ஏற்படும். ஒருவகை நோய். இப்பசலையே அவளின் களவு வாழ்க்கையை வெளிப்படுத்தும் காரணியாகவும்

அமைந்துவிடும். ஊடல் மாறுபாட்டினை அறிந்த செவிலி பசலையை நோய் என்று கருதி வெறியர்தலும் உண்டு. இப்பசலைக்கு கற்பனையோடு கலந்த விளக்கம் தருகிறார் கலைஞர்.

விளக்கு அணைந்தால்தானே இருள் நுழைய முடியும் அதைப்போல் தலைவன், தலைவியைத் தழுவுவதில் இடைவேளை ஏற்பட்டால் உடனடியாகப் பறந்தோடிச் சென்று பசலைநிறம் அந்தப் பாவையை ஆட்கொண்டுவிடும். ஆரத்தழுவி அகமகிழும் அந்தக் காதல் நிகழ்ச்சியில் தலைவி தனித்து விடப்பட்டால் போதும். பசலை அவள் மீது படந்துவிடும் என்னும் பொருளமைந்த குறள் இதோ!

***விளக்கற்றும் பார்க்கும் இருளேபோல் கொண்கன்***
***முயக்கற்றும் பார்க்கும் பசப்பு (குறளோவியம் ப - 217)***

***கன்றும் உண்ணாது கலத்தினும் படாது***
***நல் ஆன் தீம்பால் நிலத்து உக்காஅங்கு***
***எனக்கும் ஆகாது என்னைக்கும் உதவாது***
***பசலை உணீஇயர் வேண்டும்***
***திதலை அல்குல் என் மாமைக் கவினே (குறுந் - 27)***

என்னும் பாடல் தலைவியின் ஆற்றாமையை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. யாருக்கும் பயன்படாமல் என்னுடைய அழகு வீணாகி பசலையால் உண்ணப்பட்டு அழிகிறதே என்று தலைவி வருந்தி தோழியிடம் கூறுவதாக பொருள் அமைந்து பசலையின் தன்மையை எடுத்துரைக்கின்றது.

## புணர்ச்சி விதும்பல்

களவொழுக்கத்தில் நிகழும் புணர்ச்சிக்குப் பின் அதனை எண்ணி வருந்துதல் அல்லது மகிழ்தல் போன்ற நிலைகளில் புணர்ச்சி விதும்பல் வெளிப்படுகிறது. கலைஞர் சிறந்த எடுத்துக்காட்டோடு இச்செயலை எடுத்துரைக்கும் விதம் சிறப்பிற்குரியது.

***எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கண்***
***பழிகாணேன் கண்ட விடத்து (குறளோவியம் ப - 95)***

கண்ணுக்கு மையெழுதுங் கோலைக் கையிலே வைத்திருக்கும் போது பார்க்க முடிகிறது. அதே கை அந்தக் கோலைக் கண்ணிடத்திலே கொண்டுபோய் மை எழுதும் நேரத்தில் கண்களுக்கு அந்த எழுதுகோல் தெரிவதில்லை. அதுபோல கணவன் எந்த வகையான தவறு செய்திருந்தாலும் அவனைத் தன்னருகே கண்டதும் அந்தத் தவறுகள் எல்லாம் கண்ணருகே வந்துவிட்ட மையெழுதும் கோல் போல் மறைந்து விடுகின்றன என்ற தலைவியின் மனநிலையை இக்குறள் எடுத்துரைக்கின்றது.

குறுந்தொகையில் அம்மூவனாரின் பாடல் கலைஞரின் குறளோவியத்திற்கு சிறந்த சான்றாக அமைவது.

***இம்மை மாறி மறுமை ஆயினும்***
***நீ ஆகியர் எம் கணவனை***
***யான் ஆகியர் நின் நெஞ்சு நேர்பவளே (குறுந் - 49)***

என்னும் பாடலில் பரத்தையின் பிரிந்த தலைவனின் மீது கொண்டிருந்த அளவு கடந்த சினத்தால் வாயில் மறுத்த தலைவி அவன் நேரில் வந்ததும்



சினம் தணிந்து அவனை ஏற்றுக்கொள்கிறாள். அதோடு அமையாமல் பரத்தையிடம் நீடித்து இருக்காமல் தன்னை நாடி வந்த தலைவனின் அன்பு, தலைவிக்கு நெகிழ்ச்சியைத்தர தலைவி, 'இப்பிறப்பு மாறி, மறுபிறப்பு வருவதாயினும் நீயே என் கணவன் ஆகுக, நின் மனம் ஒத்தவள் யானே ஆகுக' எனக் கூறி தலைவனோடு சேர்தல் பெருமைக்குரியதாகும்.

## காமம்

காதலர்கள் பிறர்அறியா வண்ணம் சந்தித்து அன்பை பரிமாற்றம் செய்தல், புணர்ச்சியின் பின் பிரிதல் ஆகிய நிலைகளில் காம உணர்ச்சி வெளிப்படுவதாக இலக்கியங்கள் கூறுகின்றன. தலைவி பெண் என்பதால் காம உணர்வை வெளிப்படையாகக் கூறமுடியாமல் அவளது நாணம் தடுக்க இருதலை கொள்ளி எறும்பாக தவிக்கும் அவளது நிலையை அவளே தன் நெஞ்சிற்குக் கூறுவதாகக் குறளோவியமாகப் படைத்துள்ளார் கலைஞர்.

'நெஞ்சமே! ஒன்று காமத்தை விட்டுவிடு! அல்லது நாணத்தை விட்டுவிடு! இரண்டையும் பொறுத்துக் கொள்ள என்னால் இயலாது' என்ற தலைவியின் புலம்பல்,

***காமம் விடுஒன்றோ நாண்விடு நன்னெஞ்சே***
***யானோ பொறேன்இவ் விரண்டு (குறளோவியம் ப -287)***

என்னும் குறள்வழி வெளிப்படுவதை அறியமுடிகின்றது.

கலைஞரின் குறளோவியத்திற்கு இணையாக ஔவையாரின் பாடல் அமைந்திருப்பதை குறுந்தொகை எடுத்துரைக்கின்றது.

***முட்டுவேன் கொல் தாக்குவேன் கொல்***
***ஓரேன் யானும் ஓர் பெற்றி மேலிட்டு***
***ஆஅ! ஒல் எனக் கூவுவேன் கொல்***
***ஆலமரல் அசைவளி அலைப்ப என்***
***உயவு நோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே (குறுந் - 41)***

என்னும் பாடல் தலைவியின் காம உணர்வினை குறிப்பால் உணர்த்தி நிற்கின்றது. 'தென்றல் என்னை வருத்த, என் துன்பத்திற்குக் காரணமாகிய காம நோயின் கொடுமையை உணராமல் இவ்வூரார் தூங்குகின்றனர்'என்று வருந்திக் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. பாடலடிகளில் காமம் என்ற சொல்லைப் பயன்படுத்தாமல் அவ்வுணர்வினால் ஏற்பட்ட வருத்தத்தை மட்டும் ஔவையார் குறிப்பிட்டிருப்பது பெண்ணுக்குப் பெருமை சேர்ப்பதாக அமைகின்றது.

## நிறைவாக

சங்கப்புலவர்களின் புலமைத் திறத்தால் பாடப்பட்ட நல்ல என்ற அடைமொழி கொண்ட குறுந்தொகையும், வள்ளுவரின் வாக்குத்திறத்தால் முகிழ்த்த திரு என்ற அடைமொழி கொண்ட குறளும் களவொழுக்க வாழ்வின் இன்பத்தை எடுத்துரைத்தாலும், அவ்வொழுக்கத்தில் வாழ்வியல் கூறுகள் வளமாக அமைந்திருப்பதையும் காணமுடிகின்றது.